**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**

**நகர்மன்றக்கூட்டம்**

**நாள். 30.09.2021 வியாழக்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 30.09.2021

**மன்றப்பொருள்–1**

திருமதி. மணிமேகலை என்பவர் சாலையோரக்கடைகள் உரிமக்காலத்திற்கு 10 மாத காலம் நீட்டிப்பு செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடர்ந்துள்ள வழக்கு எண். W.P.(MD) NO. 962/2021–ற்கு வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு பெற்றதற்கு திரு.கே.மகேந்திரன், வழக்கறிஞருக்கு ரூ. 10,000/– தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–2**

இந்நகராட்சி சேவை மையத்தில் உள்ள சொத்துவரி, கட்டிட அனுமதி, குடிநீர் விண்ணப்பம், பிறப்புச்சான்று D&O விண்ணப்பங்கள் 01.10.2021 முதல் கீழ்க்கண்டவாறு கூடுதலாக வசூல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | விண்ணப்பங்கள் விபரம் | விண்ணப்பக்கட்டணம் |
|---|---|---|
| 1 | புதிய சொத்துவரி விண்ணப்பக்கட்டணம் | ரூ. 10 |
| 2 | புதிய சொத்துவரி பெயர் மாற்ற விண்ணப்பம் | விண்ணப்பக்கட்டணம்–10ரூ. சந்தைமதிப்பு ரூ. 5,00,000 வரை ரூ.500, ஒவ்வொரு 1,00,000–க்கும் ரூ. 50/– வீதம் வசூல் செய்ய வேண்டும் |
| 3 | கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பம் | ரூ. 100/– |
| 4 | தண்ணீர் இணைப்பு விண்ணப்பம் | ரூ. 50/– |
| 5 | பிறப்புச்சான்றிதழ் விண்ணப்பம் | ரூ. 10/– |
| 6 | இறப்புச்சான்றிதழ் விண்ணப்பம் | ரூ. 10/– |
| 7 | D&O விண்ணப்பம் | ரூ. 50/– |

மேற்கண்ட இனங்களுக்கு விண்ணப்பக்கட்டணம் 01.10.2021 முதல் நடைமுறைப்படுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 2**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–3**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–6, பேருந்து நிலையம் அருகில் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் திருமகனார் சிலை அமைந்துள்ளது. வரும் **30.10.2021** அன்று நடைபெறவுள்ள தேவர் ஜெயந்தியை முன்னிட்டு தேவர் சிலையினை புதுப்பிக்க அலங்கார விளக்குகள் அமைக்க மற்றும் நீர் ஊற்றை சரிசெய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | தேவர் ஜெயந்தியை முன்னிட்டு தேவர் சிலையினை புதுப்பிக்க, அலங்கார விளக்குகள் அமைக்க மற்றும் நீர் ஊற்றை சரிசெய்ய போன்ற பணி மேற்கொள்ளுதல் | 2.00 |

மேற்படி பணி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1).திரு. ஆர்.ரவிக்குமார், ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட – 0.30% குறைவு

1). M/s. K.P.K. கன்ஸ்ட்ரக்சன், நிறுவனம் மதிப்பீட்டை விட – 0.50% குறைவு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.ரவிக்குமார், ஒப்பந்ததாரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–4**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–22, பேரையூர் ரோட்டில் அமைந்துள்ள இந்நகராட்சி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக்கட்டிடத்தில் பழுதடைந்துள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறைகள் தினசரி வந்து செல்லும் நோயாளிகளின் அடிப்படை தேவையான கழிப்பறைகளை புனரமைப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு–22, பேரையூர் ரோட்டில் அமைந்துள்ள இந்நகராட்சி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக்கட்டிடத்தில் | 1.60 |

| | | |
|---|---|---|
| | பழுதடைந்துள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறைகள் தினசரி வந்து செல்லும் நோயாளிகளின் அடிப்படை தேவையான கழிப்பறைகளை புனரமைப்பு செய்யும் பணி | |

மேற்படி பணி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1).திரு. ஆர். மருதுபாண்டி, ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட – 0.20% குறைவு
2).திரு. கே.ராஜேஸ்கண்ணன், ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட – 0.50% அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.மருதுபாண்டி, ஒப்பந்ததாரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1833/2021/இ1)

**தீர்மானம் எண். 4**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–5**

உசிலம்பட்டி நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு சாலை துண்டிப்புக்கட்டணத்தை முறைப்படுத்த, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/குவ.2, நாள். 21.09.2009–இல் அறிவுறுத்தியுள்ளபடி, 2009–10–இல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலைத் துண்டிப்புக் கட்டண வகைப்படுத்தலை அடிப்படையாகக்கொண்டு ஆண்டுதோறும் 5 சதவிகிதம் உயர்வு செய்து வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் நடப்பாண்டு வரை கீழ்க்கண்ட அட்டவணைப்படி வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | 0.30 மீ | | | |
|---|---|---|---|---|
| மண்சாலை | 1630 | 1712 | 1798 | 188 |
| தார்ச்சாலை | 3491 | 3666 | 3849 | 4041 |
| சிமெண்ட் பேவர் பிளாக் | 4034 | 4242 | 4454 | 4677 |
| | 30–90 மீ | | | |
| மண்சாலை | 2561 | 2689 | 2823 | 2964 |
| தார்ச்சாலை | 4423 | 4644 | 4876 | 5120 |
| சிமெண்ட் பேவர் பிளாக் | 4962 | 5210 | 5471 | 5745 |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1623/2021/இ1)

**தீர்மானம் எண். 5**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–6**

இந்நகராட்சியின் ஜுலை 2021–ம் மாதம் பிடித்தம் செய்த GST வரியினை உரிய அரசு தலைப்பில் உரிய ஒப்பந்ததாரர் மற்றும் உரிமதாரர் பெயரில் GSTR-7 பதிவேற்றம் செய்யப்பட்டமைக்கு சேவைக்கட்டணம் ரூ. 2,000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) RIFA TAX CONSULTANCY நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

1).மன்றம் அனுமதிக்கலாம்

2).அரசுக்கு வரி செலுத்த வேண்டியதன் முக்கியவத்துவம் கருதி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 6**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–7**

இந்நகராட்சியின் ஏப்ரல் 2021 முதல் ஜுன் 2021 வரையிலான காலத்திற்கு ஒப்பந்தப்பட்டியல் மற்றும் விநியோகப்பட்டியலில் பிடித்தம் செய்த வருமான வரியினை உரிய தலைப்பில் இணைய வழியாக GSTR 2491 பதிவு செய்தமைக்குரிய சேவைக்கட்டணம் ரூ. 4000/– (ரூபாய் நான்காயிரம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து RIFA TAX CONSULTANCY நிறுவனத்திற்கு வழங்கலாம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1).மன்றம் அனுமதிக்கலாம்

2).மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 71**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–8**

இந்நகராட்சியின் நகரமைப்பு பிரிவில் புதிதாக கட்டிட வரைபட வரைவாளர் உரிமம் பதிவு செய்யும் பொருட்டு திரு. செ.விஸ்வநாத் த/பெ. செல்லப்பாண்டியன் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார். அன்னாரை இந்நகராட்சி நகரமைப்பு விதிகளுக்குட்பட்டு பதிவு பெற்ற கட்டிட வரைபட வரைவாளராக உரிமம் வழங்குவது தொடர்பாக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).இந்நகராட்சி நகரமைப்பு விதிகளுக்குட்பட்டு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1790/2021/எப்.1)

**தீர்மானம் எண். 8**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–9**

இந்நகராட்சியின் நகரமைப்பு பிரிவில் புதிதாக கட்டிட வரைபட வரைவாளர் உரிமம் பதிவு செய்யும் பொருட்டு திரு. சி.தேவகுமார் த/பெ. சின்னாத்தேவர் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார். அன்னாரை இந்நகராட்சி நகரமைப்பு விதிகளுக்குட்பட்டு பதிவு பெற்ற கட்டிட வரைபட வரைவாளராக உரிமம் வழங்குவது தொடர்பாக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).இந்நகராட்சி நகரமைப்பு விதிகளுக்குட்பட்டு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1532/2021/எப்.1)

**தீர்மானம் எண். 9**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–10**

இந்நகராட்சியின் நகரமைப்பு பிரிவில் புதிதாக கட்டிட வரைபட வரைவாளர் உரிமம் பதிவு செய்யும் பொருட்டு திரு. வ.ராஜா த/பெ. வரதராஜன் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார். அன்னாரை இந்நகராட்சி நகரமைப்பு விதிகளுக்குட்பட்டு பதிவு பெற்ற கட்டிட வரைபட வரைவாளராக உரிமம் வழங்குவது தொடர்பாக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).இந்நகராட்சி நகரமைப்பு விதிகளுக்குட்பட்டு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1414/2021/எப்.1)

**தீர்மானம் எண். 10**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–11**

உசிலம்பட்டி நகராட்சி உள்ளூர் மற்றும் வெளியூர் தபால்கள் வருவதை நம்பர் போட்டு பிரிவு எழுத்தர்களுக்கு வழங்க நம்பர் மிஷின் திருமதி. மு.பாண்டியம்மாள், இளநிலை உதவியாளர் சொந்த செலவில் வாங்கிய வகையில் அவருக்கு செலவினத்தொகை ரூ. 1000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).நம்பர் மிஷின் வாங்கிய செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 11**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–12**

மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 11945/2020/தே6, நாள் 09.09.2021–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரையின்படி நகராட்சி எல்லைக்குட்பட்ட 10 இடங்களில் மாபெருமாள் சிறப்பு கோவிட்–19 தடுப்பூசீ முகாம்கள் நடத்தவும், மேற்படி முகாம் நடைபெறும் விபரத்தை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோ மூலம் விளம்பரப்படுத்தவும், கேபிள் டிவி மூலம் விளம்பரப்படுத்தவும, ஒரு முகாமிற்கு 2 பேனர் வீதம் 10 முகாம்களுக்கும் 20 விழிப்புணர்வு பேனர்கள் அச்சடிக்கவும், முகாம் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மைணி வரை நடைபெறுவதால் முகாமில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு தேநீர் மற்றும் மதிய உயவு வழங்கவும் அதற்காக்கும் உத்தேச செலவினத்தொகை ரூ. 17,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

கோவிட்–19 தடுப்பூசி செலுத்துவதன் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தடுப்பூசி முகாம் நடைபெறுவதற்கு தேவையான பணிகளை மன்றத்தின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 77/2021/சி1)

**தீர்மானம் எண். 12**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–13</u>

மாவட்ட ஆட்சி தலைவர், மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 11945/2020/தே 6 நாள் 09.09.2021ன் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 தடுப்பு நடவடிக்கையாக 10 இடங்களில் சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்த இருப்பது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மற்றும் போதிய வசதிகள் செய்து தர 10.09.2021 அன்று விலைப்புள்ளி கோரப்ட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

M/S KPK Construction நிறுவனத்தின் விலைபுள்ளி விபரம்

1. விழிப்புணர்வு பேனர்கள் அச்சடிக்க – ரூ. 50 (1 பேனருக்கு)
2. கேபிள் டிவியில் விளம்பரம் மேற்கொள்ள – ரூ. 300 (1 நாளைக்கு)
3. ஆட்டோ மூலம் விளம்பரபடுத்த (ஓட்டுநர் படி உட்படட) – ரூ. 600 (1 நாளைக்கு)
4. முகாமில் ஈடுபடுத்தபடும் பணியாளர்களுக்கு தேநீர் மற்றும் மதிய உணவு வழங்குதல் – ரூ. 106(1 நபருக்கு)

P.காட்டுராஜா, ஒப்பந்தாரரின் விலைபுள்ளி விபரம்

1. விழிப்புணர்வு பேனர்கள் அச்சடிக்க – ரூ. 80 (1 பேனருக்கு)
2. கேபிள் டிவியில் விளம்பரம் மேற்கொள்ள – ரூ. 310 (1 நாளைக்கு)
3. ஆட்டோ மூலம் விளம்பரபடுத்த (ஓட்டுநர் படி உட்படட) – ரூ. 900 (1 நாளைக்கு)
4. முகாமில் ஈடுபடுத்தபடும் பணியாளர்களுக்கு தேநீர் மற்றும் மதிய உணவு வழங்குதல் – ரூ. 115 (1 நபருக்கு)

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/S KPK Construction நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.தடுப்பூசி செலுத்துவதன் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க எண் 77/2020/சி1)

**தீர்மானம் எண். 13**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–14**

மாவட்ட ஆட்சி தலைவர், மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 11945/2020/தே 6 நாள் 09.09.2021ன் படியும் 16.09.2021ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையின் படியும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 தடுப்பு நடவடிக்கையாக 10 இடங்களில் 19.09.2021 அன்று சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்த இருப்பதால் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் போதிய வசதிகள் செய்து தர ஏற்கனவே வேலை உத்தரவு வழங்கப்பட்ட M/S KPK Construction நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 18000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.தடுப்பூசி செலுத்துவதன் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க எண் 77/2020/சி1)

**தீர்மானம் எண். 14**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–15**

மாவட்ட ஆட்சி தலைவர், மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 11945/2020/தே 6 நாள் 09.09.2021ன் படியும் 24.09.2021ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையின் படியும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 தடுப்பு நடவடிக்கையாக 10 இடங்களில் 26.09.2021 அன்று சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்த இருப்பதால் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் போதிய வசதிகள் செய்து தர ஏற்கனவே வேலை உத்தரவு வழங்கப்பட்ட M/S KPK Construction நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 18000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.தடுப்பூசி செலுத்துவதன் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க எண் 77/2020/சி1)

**தீர்மானம் எண். 15**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்—16</u>**

மாவட்ட ஆட்சி தலைவர், மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 11945/2020/தே 6 நாள் 09.09.2021ன் படி தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையின் படியும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்—19 தடுப்பு நடவடிக்கையாக 10 இடங்களில் தொடர்ச்சியாக சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்த இருப்பதால் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த 10000 எண்ணம் விழிப்புணர்வு பிரசரம் அச்சடிக்கவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 20000/— க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.தடுப்பூசி செலுத்துவதன் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க எண் 77/2020/சி1)

**தீர்மானம் எண். 16**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்—17</u>**

மாவட்ட ஆட்சி தலைவர், மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 11945/2020/தே 6 நாள் 09.09.2021ன் படி தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையின் படியும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்—19 தடுப்பு நடவடிக்கையாக 10 இடங்களில் தொடர்ச்சியாக சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்த இருப்பதால் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த 10000 எண்ணம் விழிப்புணர்வு பிரசரம் அச்சடிக்க 22.09.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

M/S KPK Construction நிறுவனத்தின் விலைபுள்ளி விபரம்

விழிப்புணர்வு பிரசுரம் — ரூ.1.80/— 1 எண்ணம் ( A4 Size)

P.காட்டுராஜா, ஒப்பந்தாரரின் விலைபுள்ளி விபரம்

விழிப்புணர்வு பிரசுரம் — ரூ.2.00/— 1 எண்ணம் ( A4 Size)

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/S KPK Construction நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.தடுப்பூசி செலுத்துவதன் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க எண் 77/2020/சி1)

**தீர்மானம் எண். 17**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்—18</u>**

உசிலம்பட்டி நகராட்சியின் பொதுச்சுகாதாரப்பிரிவு 54 தூய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் தலைக்கவசம் மற்றும் கையுறை போன்றவை வாங்க வேண்டியிருப்பதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 50,000/— (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.தூய்மைப்பணியாளர்கள் பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் பணிக்கு செல்ல நேரிடுவதால் பொதுச்சுகாதார தூய்மை பணி பாதிக்கப்படுவதால் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2020/2021/எச்1)

**தீர்மானம் எண். 18**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–19</u>**

உசிலம்பட்டி நகராட்சியின் பொதுச்சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் 54 தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்க வாங்க விலைப்புள்ளி அறிவிப்பு வழங்கப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | நிறுவனத்தின் விபரம் | உபகரண விபரம் | விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி | தலைக்கவசம் | 620 |
| | | கையுறை | 310 |
| 2 | கோபாலகிருஷ்ணன் பிரைவேட் ஏஜென்சி, | தலைக்கவசம் | 650 |
| | | கையுறை | 345 |
| 3 | சோலை மேன்பவர் ஏஜென்சி | தலைக்கவசம் | 700 |
| | | கையுறை | 350 |

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.

(ந.க..ண். /2021/எச்1)

**தீர்மானம் எண். 19**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–20</u>**

மாவட்ட ஆட்சியர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். 32027/2021/தே6, நாள். 3.9.2021– இன்படி எதிர்வரும் வடகிழக்கு பருவமழையில் நகரின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மழைநீர் வடிகால், சிறு பாலங்களில் மழைநீர் அடைக்கா வண்ணம் வீடுகளில் வெள்ளநீர் புகா வண்ணம் கால்வாய் தூர்வாரும் பணிக்கு ஜே.சி.பி. இயந்திரம் ஜெயின்டோசர் மற்றும் டிராக்டர் இயந்திரங்கள் மூலம் 20.09.2021 முதல் 25.09.2021 வரை மாபெரும் மழைநீர் வடிகால் தூய்மைப்பணி முகாமாக அறிவித்து நகரின் அனைத்து பகுதிகளிலும் தூர்வார அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணி மன்றத்தின் அனுமதிக்கும், உத்தேச செலவினம் ரூ. 5.10 இலட்சத்திற்கு பணியின் முக்கியத்துவம் குறித்து விலைப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

**2.**வடகிழக்கு பருவமழையின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 20**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி